REVIEW OF RESEARCH

IMPACT FACTOR : 5.7631(UIF) UGC APPROVED JOURNAL NO. 48514 ISSN: 2249-894X

VOLUME - 8 | ISSUE - 1 | OCTOBER - 2018

# வேதாத்திரிய இறைத்தத்துவமும் உபநிஷதம் இறைவிளக்கம் பற்றிய ஓர் ஆய்வு

**R. Rajesh[1] and Dr. G.R. Valliammal[2]**


[1]M.Phil. Scholar, Bharathiar University, Coimbatore, Tamil Nadu.

[2]Assistant Professor, Department of Yoga for Human Excellence, WCSC Vision, SKY Research Centre, Aliyar, Pollachi, Coimbatore, Tamil Nadu.

**ஆய்வு சுருக்கம்:**

"எல்லாம் அறியும் அறிவுதனை விட்டு
எல்லாம் அறிந்தும் பயன் இங்கில்லை
எல்லாம் அறியும் அறிவை நான் என்றால்
எல்லாம் அறிந்த இறை எனலாமே" - திருமந்திரம்.

வேதாத்திரிய இறைத் தத்துவமும் உபநிஷதம் இறைத் தத்துவமும் கூறும் இறைத் தன்மை விளக்கங்களை ஒப்பிட்டு அறிதல். அவற்றிக்கிடையே உள்ள ஒற்றுமைகளையும், வேறுபாடுகளையும் கண்டறிதல். வேதாத்திரியின் இறைத்தத்துவம் கூறுவதை உபநிஷத்துடன் ஒப்பிட்டு கூறும் தத்துவத்தை பட்டியலிட்டு உண்மை நிலையை எடுத்துரைத்தல். நான் யார், உருவ வழிபாடு மற்றும் அருவ வழிபாடு போன்ற தத்துவ விளக்கங்களை அறிதல்.

**கலைச்சொற்கள்:**ஆன்ம அனுபூதி. பூரணம், பிரம்மம், ஸம்பூதி, அஸம்பூதி, பிராணன்

**முன்னுரை:**

மனிதகுலம் இவ்வுலகில் அமைதியுடனும், சிறப்புடனும், இறைதன்மை பெற்று வாழும் வழிமுறைகளை இவ்வுலகில் வாழ்ந்த மகான்கள், ஞானிகள், சித்தர்கள் இறைத்தன்மை விளக்ககளை தத்துவங்களாக மனித குலத்திற்க்கு எடுத்துரைத்தனர். இத்தத்துவ விளங்கள்களை புரிந்து கொண்டு வாழும் போது மனித குலம் சிறப்புடனும் அமைதியுடனும் இருந்தது. இத்தத்துவ விளக்களில் சிக்கல்கள் ஏற்படும் போது வெவ்வேறு காலக்கட்டத்தில் வாழ்ந்த மகான்கள், சித்தர்கள், ஞானிகள் தத்துவ விளக்கங்களை அதில் உள்ள உண்மைகளை எடுத்துரைதனர், அதுவே வேதங்களாக பிற்காலத்தில் தோன்றியது. இவ்வேத விளக்கங்களில் முரண்பாடுகளும், புரிதலில் சிக்கல்கள் ஏற்படும் போது புராணங்களின் மூலம் தத்துவங்கள் விளக்கப்பட்டன. ஆனால் பல்வேறு கருத்துகளின் விளக்கங்கள் எளிமையாக விளக்க இதிகாசங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

மனித குலம் இறைதன்மை பெற்று வாழ்ந்திட பல்வேறு வழிமுறைகளும். விளக்கங்களும் கையாளப்பட்டன. ஆனால் காலபோக்கில் ஒரு சிலர் மட்டும் அறியும் வகையில் அமைந்தது. இதனால் மனித குலத்தில் பல்வேறு பிணக்குகளும், பிரச்சனைகளும் ஏற்பட்டன. மதம், சாதி போன்ற பல்வேறு பாகுபடுகள் உருவாயின. இதனை பயன்படுத்தி மதவாதிகள் இறைத்தத்துவ விளக்கங்களை மறைத்தனர். இதனால் இறைத்தத்துவிளக்கங்கள் முழுமை அடையாமல் மனித குலம் இக்காலம் வரையில் சிக்கலுடன் அறியாமையில் மூழ்கியுள்ளது.

**ஆய்வுச் சிக்கல்:**

உபநிஷதம் இறைத் தத்துவம் வேதாந்திரிய இறைத் தத்துவத்தில் முழுமையாக காணப்படுகின்றதா?

**கருதுகோள்:**

உபநி'தம் இறைத்தத்துவமும், விளக்கங்களும் வேதாந்திரிய இறைத் தத்துவத்துவ விளக்கங்களும் ஒன்றா? அல்லது வேறுபாடு உள்ளதா? என்று அறிதல்

**ஆய்வின் வரம்பு:**

இறைத்தத்துவத்தின் முழுமைபற்றி வேதாத்திரியம் மற்றும் உபநிஷதம் கூறும் தத்துவங்களை வேதாந்திரிய விளக்கங்களுடன் தொடர்பு படுத்தி உண்மை விளக்கங்களை அறிதல். இவ் ஆய்வில் மனித குலம் அறிய முற்படும் பிரம்மம் சார்ந்த விளக்கங்கள், ஆன்மா பற்றி விளக்கம், மரணத்திற்குப் பின் நிலை, முக்தி நிலை, அறிவின் முழுமை நிலை, அனைத்தும் ஒன்றே என்ற விளக்க முறைகள் எளிதாக உபநிஷதம் தத்துவங்கள் தொடர்பு படுத்தி வேதாத்திரிய விளக்கங்களுடன் வரம்புபடுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வின் எல்லை:**

இறைத்தத்துவத்தை இவ்வுலகிற்க்கு அளித்த அனைத்து மகான்கள், சித்தர்கள், ஞானிகள் கூறும் இறைத் தத்துவம் மற்றும் உபநிஷதம் இறைத்தத்துவம் ஆய்வின் எல்லையாக எடுத்து கொள்ளப்பட்டது.

**ஆய்வின் முக்கியத்துவம்:**

தத்துவ ஞானிவேதாத்திரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட வேதாத்திரியம் மனித குலம் வாழும் முறை, ஆன்மாவின் உண்மை நிலை, இறைத்தன்மை மற்றும் இறைத் தத்துவத்தை உணரும் வழிமுறைகள், சமுதாய நலன், மனதை வளபடுத்தும் முறை, அறிவின் முழுமை நிலை போன்றவை இறைத்தன்மையுடன் கூறிய விளக்கங்கள் உபநிஷ தத்துவங்கள் உடன் ஒத்துபோகின்றன. ஏனென்றால் மனித குலம் அறியாமை இருளில் மூழ்கியுள்ள போது இறைநிலை அவ்வறியாமை நீக்க மகான்களின் மூலம் தெளிவு படுத்திய தத்துவங்கள் உபநிஷதங்கள் ஆகும்.

இவ்வாறு பல வேதாந்ததத்துவங்கள் பல நூல்கள் கற்றறிந்த பின் கிடைக்கும் விளக்கங்கள் வேதாத்திரியத்தில் தொகுப்பாக காணப்படுகின்றது. இவ்ஆய்வின் மூலம் உபநிஷ தத்துவங்கள் எளிதாக அறிய முடிகின்றது. இவ் ஆய்வு மேற்காட்டியுள்ள காரணம் இக்கால கட்டத்தில் எந்த ஒன்று அறிய வேண்டுமனாலும் விஞ்ஞான விளக்கங்கள், நூல்களின் தொகுப்புகள். மற்றும் மகான்களிள், ஞானிகளின் விளக்கங்கள் போன்றவை குறிபிட வேண்டியுள்ளது. உபநிஷதத்துவங்கள் ஒன்றே மனித குலம் சிறப்பாக வாழ ஞானிகள் மூலம் வழங்கப்பட்டது. இதனை வேதாத்திரியத்துடன் வழியில் ஒப்பிட்டு வழங்கும் போது மனிதன் ஆன்மீகமேம்பாடு அடையவும், வாழ்க்கையை வாழும் முறைகள் அறிந்து கொள்ளவும், எல்லாம்வல்ல இறைத்தன்மை அறியவும், பிரபஞ்சத்தின் உண்மை நிலையை அறியவும். மேலும் பல ஆன்மீகம் சார்ந்த குழப்பங்கள் யாவும் விளக்கப்படுகின்றன.

**ஆய்வு விமர்சனம்**

**சுவாமி அஜராத்மானந்தர்.**

உபநிஷதம் விளக்கவுரைகள் ஸ்ரீ ஆதிசங்கரர் எழுதியதை ஆங்கிலத்தில் சுவாமி சர்வானந்தர் எழுதி உள்ளார். இதனை தமிழ் பெயர்ப்பு 1987ல் ராமகிருஷ்ண மடம் சுவாமி அஜராத்மானந்தரால் 10 உநிஷங்கள் தமிழில் விளக்கவுரை அமைந்துள்ளது.

ஸ்ரீ மத்துவர் மற்றும் ஸ்ரீ வேதாந்த தேசிகரும் உபநிஷத்திற்கு விளக்கவுரை எழுதிவுள்ளனர்.

**அணுகுமுறை:**

பல்வேறு காலக்கட்டங்களின் தோன்றிய இறைத் தத்துவங்களை விளக்கிய மகான்களின் நூல்களை வேதாத்திரியின் இறைத் தத்துவத்தோடு ஒப்பிட்டு அறிதல்.

**தொகுப்புரை:**

அறியாமை நீக்கி அனைத்து மனித குலம் இறைத்தத்துவத்தை அறிய தத்துவஞானி வேத்தாத்திரி மகரிஷி மூலம் வடிவமைக்கப்பட்ட வேத்தாத்திரியம் உபநிஷத தத்துவங்களை எளிமையாக புரியவைத்துள்ளது. இத்தத்துவ விளக்கங்கள் உபநிஷத்துடன் தொடர்பு படுத்தி தத்துவமாக விளக்கம் பெறுகிறது. எளிதாக பாமர மக்களும் புரியும் வகையில் வேதாத்திரிய விளக்கங்கள் அமைந்துள்ளது. உபநிஷத தத்துவங்கள் இக்காலகட்டங்களில் சில தத்துவங்கள் விளக்கங்கள் யாரலும் எடுத்துரைக்க முடியவில்லை. இறைத்தத்துவத்தை உணர்ந்தவர்கள் கொடுக்கும் விளக்கங்கள் அடிப்படையில் உணர முடிகிறது. அதன் அடிப்படையில் உப நிஷதங்களும் கூறும் இறைதத்துவங்கள் வேதாத்திரியத்தின் இறைத் தத்துவத்தை ஒத்துள்ளது. எல்லாம்வல்ல இறை அருளும் குரு அருளும் துணையாய் நின்று மனித குலம் உண்மை இயல்பை மறைக்கின்ற அறியாமை அகற்றிட வேதாத்திரியின் இறைத்தத்துவம் அமைந்துள்ளது. வேதங்களின் சுருக்கம் உபநிஷதம், உபநிஷதம் சுருக்கம் வேதாத்திரியம் ஆகும்.

**பரிந்துரை:**

இவ்வாய்வு முக்கியமாக மேற்கொள்ள காரணம் இறைத்தத்துவத்தை உண்மை நிலை அறியாமல் மனித குலம் குழப்பத்தில் உள்ளது. ஆனால் வேதாத்திரி மகரிஷி மூலம் இறைநிலை உணர்வோடு அருளிய இறைத்தத்துவ விளக்கம் எளிமையாக பாமர மக்கள் அறியும் வகையில் அமைந்துள்ளது. எனவே எங்கு தேடி அலையாமல் வேதாத்திரிய கல்வி மூலம் பயின்று இறைத் தத்துவத்தை அளிமையாக கருத்தின் அடிப்படையில் புரிந்து கொள்ள முடிகிறது.

**நூற்பட்டியல்**

**10 உபநிஷதம் நூல்கள்**

1. ஈசாவாஸ்ய உபநிஷதம்
2. ஐதரேய உபநிஷதம்
3. மாண்டூக்ய உபநிஷதம்
4. பிரசன்ன உபநிஷதம்
5. கைவல்ய உபநிஷதம்
6. கேன உபநிஷதம்
7. கட உபநிஷதம்
8. தைத்தீரீய உபநிஷதம்
9. முண்டக உபநிஷதம்
10. பிருஹதாரண்யக உபநிஷதம்